ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 14,874/7 — 1969 ඔක්තෝබර් 7 වැනි අඟහරුවාද — 1969.10.7
14,874/7 ம் இலக்கம்—1969 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 7 ந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### உள்ளூராட்சி பற்றிய விசாரணைக்குழு

(1) உள்ளூர் அதிகாரசபைகளின் தற்போதைய போதிய வருமானம், அரசாங்கத்திற்கும் உள்ளூர் அதிகார சபைகளுக்கும் இடையிலான தற்போதைய நிதித்தொடர்புகள், உள்ளூர் அதிகாரசபைகள் தமது கடமைகளை மிகத்திறமையுடன் செய்வதற்கு என்ன வளங்களின் மூலம் அவற்றின் வருமானத்தைக் கிடைக்கக்கூடியதாகச் செய்யலாம் என்பதற்கும்,

(2) உள்ளூர் அதிகாரசபைகள் மிகத்திறமையாகச் செயலாற்றுவதற்குத் தற்போதைய மாநகர முதல்வர்கள்/தலைவர்கள் தெரிவிலும், மாநகர முதல்வர்கள்/தலைவர்களின் தத்துவங்கள், கடமைகளிலும் அவர்களுக்குச் சபைகளுடன் தொடர்புகள் ஆகிய ஏதாவதிலாயினும் மாற்றங்கள் செய்யவேண்டுமா என்பதற்கும்,

(3) குழுவிற்குச் சமர்ப்பிக்கவேண்டிய ஏனைய விடயங்கள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து சிபார்சு செய்வதற்குமாக கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள்,

திரு. வீ. சீ. ஜயசூரிய, தலைவர்

திரு. டீ. எஸ். டீ. சில்வா

கலாநிதி சி. எப். அமரசிங்க

ஆகியோர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளார்.

விசாரணை செய்யப்படும் விடயங்கள் பற்றிய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் உள்ளூராட்சிச் சபைகள், உள்ளூராட்சிச் சபைகளின் சங்கங்கள், உள்ளூராட்சிச்சபை ஊழியர்கள், வரியிறுப்பாளர் சங்கங்கள் மற்றும் அக்கறையுள்ள நபர்கள், நிறுவனங்கள் ஆகியோரிடமிருந்து இக்குழு கோருகின்றது. இந்த ஆலோசனைகளையும் கருத்துக்களையும் நானகு பிரதிகளில் தயாரித்து இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து இரண்டுவார காலத்துக்குள் இதன் கீழ்க் கையொப்பம் இட்டிருப்பவருக்கு அனுப்பி வைக்கவேண்டியது விரும்பத்தக்கது. அவசியமேற்படுமிடத்து தெரிவிக்கப்படும் ஆலோசனைகள் கருத்துக்கள் ஆகியவற்றிலிருந்து எழும் எவ்விடயம் பற்றியும் கலந்துரையாடுவதற்கு இக்குழு ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கும். இதற்கான திகதியும் நேரமும் காலக்கிரமத்தில் அறிவிக்கப்படும். இக்குழுவின் பணிமனை, கொழும்பு–4, பம்பலப்பிட்டி ட்றைவ், 8 ஆம் இலக்க இல்லத்தில் (வாடகைக் கட்டுப்பாட்டு மீளவாய்தல் சபையின் பணிமனை) செயற்படும்.

இல. 8, பம்பலப்பிட்டி ட்றைவ்,
கொழும்பு–4.

எம். எல். எம். பெரேரா,
செயலாளர், உள்ளூராட்சி பற்றிய விசாரணைக்குழு.

10–606

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.